# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 19 வெள்ளிக்கிழமை 03.01.2025 கதிர் 85









## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து மனோ எம்.பி. – ஜூலி சங் நேரில் பேச்சு

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பு, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நகர்வு, அதிகாரப் பகிர்வு, மலையக பெருந்தோட்டக்காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள், சர்வதேச நாணய நிதியம் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு இன்று தெரிவித்தார்.

### தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில்

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களுடன் பேச முடிவு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தகவல்



தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோருடன் கலந்து ரையாடி அந்தச் சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்ப தாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 7➤

## ஐ.தே.க. பொதுச்செயலாளராக தலதா அத்துகோரள நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராக முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள நியமிக்கப் பட்டுள்ளார். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே இதற்குரிய 7➤

## மஹிந்தவின் மகன் யோஷிதவை இரு மணிநேரம் துருவிய சி.ஐ.டி.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகமான நேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.



கதிர்காமம் பகுதியில் அமைந்துள்ள அரச காணி ஒன்றின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் 7➤

## மார்ச் மாத இறுதியில் உள்ளூராட்சித் தேர்தல்

### உறுதிப்படுத்தியது அநுர அரசு



எதிர்வரும் மார்ச் மாதம் இறுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ளதை ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் நிஹால் அபேசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். உள்ளூராட்சி சபை மற்றும் 7➤

## மூளைச்சாவு அடைந்த இலங்கை அகதியின் உடல் உறுப்புகள் தானம்: எழுவர் மீள்வாழ்வு

மூளைச்சாவடைந்த ஈழ அகதியின் உடல் உறுப்புகள் தானம்செய்யப்பட்டதால், எழுவர் மீள்வாழ்வு பெற்றுள்ளமை பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் புதுச்சேரி அருகே தமிழகப் பகுதியான கீழ்புத்துப்பட்டு இலங்கை அகதிகள் முகாமைச் 7➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சுகாதாரத்துறைக்கு அரசு கூடுதல் நிதியொதுக்கீடு!

முப்பத்து மூன்று முக்கோடி தேவர்களை விட அரசாங்கம் சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதியொதுக்கீடு செய்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நோயாளர் விடுதி தொகுதியொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ருஹுணு கதிர்காமம் தேவாலய உண்டியலுக்கு பக்தர்கள் செலுத்திய நேர்த்தி மற்றும் காணிக்கைப் பணத்தில் இருந்து மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு நோயாளர் விடுதி தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் எந்தவொரு வெளி தரப்பினரதும் நிதி அன்பளிப்புகள் மற்றும் இவ்வாறான செயற்பாடுகளை சுகாதாரத்துறையில் அனுமதிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம்.

அவ்வாறு நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் அரசாங்கத்திடம் கையளித்த பின்னர், அதன் மூலம் அரசாங்கத்துக்கு வேண்டாத சுமை ஏற்படுகின்றது. கட்டிடம் இருக்கின்றது, வசதிகள் இல்லை, மருத்துவர்கள் இல்லை என்று பொதுமக்கள் அரசாங்கத்தைத் தான் குறை கூறுவார்கள்.

ருஹுணை கதிர்காம தேவாலயம் மட்டுமன்றி முப்பத்து மூன்று முக்கோடி தேவர்களும் ஒன்று சேர்ந்து ஒதுக்கும் நிதியை விட அரசாங்கம் சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதியையே ஒதுக்கீடு செய்துள்ளது.

இனி வரும் காலங்களிலும் அவ்வாறே நிதியொதுக்கப்படும் எதிர்வரும் 20 ஆண்டுகாலத்தை உத்தேசித்தே எங்களுடைய சுகாதாரக் கொள்கைகள் இனி வரும் காலங்களில் உருவாக்கப்படும்.

அதன்போது வெளி தரப்பினருடன் தலையீடுகள், நிதிஅன்பளிப்புகள் கட்டுப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.



## மரக்கறிகளின் விலை குறைவடைந்தன

அண்மைய நாட்களில் அதிகரித்துள்ள மரக்கறிகளின் விலை தற்போது குறைவடைந்துள்ளதாக, தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களாக நிலவும் மழையனால் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக, வர்த்தக சங்கத்தின் தலைவர் சி.சிறிவர்தன தெரிவித்தார்.

மேலும், மழைக்காலத்தில் காய்கறிகளின் விலை உயர்வதற்கான காரணங்களையும் விளக்கினார.

# மொட்டுக்கட்சியை நம்பி ஏமாந்தவர்கள் திரும்பி வரலாம்! சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கடந்த காலத்தில் மொட்டுக் கட்சியை நம்பி அதன் பின்னால் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அரசியல்வாதிகளை மீண்டும் தாய்க்கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினபொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறித்த அழைப்பை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏராளமான முன்னாள் அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் மொட்டுக் கட்சியை நம்பி அதன் பின்னால் சென்றிருந்தனர்.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஓரளவுக்கு பலவீனமடைந்தது உண்மை. எனினும் மொட்டுக் கட்சிக்கு பின்னால் சென்றவர்களை இன்று அக்கட்சி கைவிட்டுள்ளது.

இன்னும் சிலர் அக்கட்சியில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளனர் அவ்வாறானவர்கள் இன்று தங்கள் அரசியல் எதிர்காலம் குறித்து எந்தவொரு தெளிவான தீர்மானமும் இன்றி நட்டாற்றில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர் அவர்களை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

அதன் ஊடாக சுதந்திரக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் துமிந்த திசாநாயக்க தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.



## நாட்டை வந்தடைந்த வருடத்தின் முதலாவது பயணிகள் கப்பல்

இந்த வருடத்தின் முதலாவது பயணிகள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒஷனியா ரிவேரா என்ற இந்த அதிசொகுசு ரக கப்பல் மாலி இராஜ்ஜியத்தில் இருந்து, நேற்று கொழும்பை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பலில் 1,185 பயணிகள் மற்றும் 750 பணிக்குழாமினர் வருகை தந்ததுடன், அவர்கள் கொழும்பு, களனி ரஜமஹா விகாரை, பின்னவல யானைகள் சரணாலயம் ஆகியவற்றை பார்வையிடுவதற்காக சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், யுவைமநெ ளிநஉெந வுசயளநட பயண நிறுவனத்தின் தலையீட்டுடன் நாட்டை வந்தடைந்துள்ள குறித்த கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகாரிகளுக்கு நீதவான் வழங்கியுள்ள அறிவுரை!

தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபர்களை விலங்குகளைப் போன்று நடத்த வேண்டாம் என்று,கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன சிறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் திறந்த நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்போது அவர்களை ஒன்றாக சங்கிலியால் பிணைக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். தடுப்புக்காவலில் உள்ள நபர்களும் மனிதர்கள் என்றும், கண்ணியத்துடன் நடத்தப்பட தகுதியானவர்கள் என்றும் அதிகாரிகளுக்கு அவர் நினைவூட்டியுள்ளார்.

சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட சந்தேகநபர்கள் குழு ஒன்றை, அதிகாரிகள், நேற்று, நீதிமன்ற அறைக்குள் கொண்டு வந்ததைக் கவனித்த பின்னர், மேலதிக நீதிவான் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். சந்தேகநபர்களை விலங்குகளைப் போன்று சங்கிலியால் பிணைத்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதில் தமக்கு உடன்பாடு இல்லை என்றும் மேலதிக நீதிவான் திறந்த நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.

இந்தநிலையில், தடுப்புக்காவலில் உள்ள கைதிகளை முறையான நடைமுறைகளின்படி நீதிமன்ற அறையில் வைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

# உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம்



யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் கிராம்புவில் பகுதியில் உள்ள வயல் கிணறொன்றில் இருந்து நேற்று பிற்பகல் வயோதிபப் பெண் ஒருவருடைய சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வயல் ஒன்றுக்கு பசளை இடச் சென்றவர்கள், வயல் கிணற்றுக்குள் வயோதிப பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ணுற்று பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் தொடர்பில் தகவல் வெளியாகாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

## குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் யோஷித ராஜபக்ஷ

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ இன்றைய தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார்.

கதிர்காமம் பகுதியில் அமைந்துள்ள அரச காணி ஒன்றின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, யோஷித ராஜபக்ஷ குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி யோஷித ராஜபக்ஷ குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார்.

அதேவேளை குறித்த காணி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியான நெவில் வன்னியாராச்சி கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி அவர் 4 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை ஏமாற்றும் கர்ப்பிணிப் பெண்கள்

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதியில் கர்ப்பம் தரித்ததாக போலியான முறையில் வெளிப்படுத்தி, வீதியோரம் பிச்சையெடுத்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் நேற்று காலை பாணந்துறை தெற்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 57 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக கர்ப்பிணிப் பெண் ஒருவர் பாணந்துறை பேருந்து நிலையம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பிச்சை எடுப்பதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு வருடங்களாக அவர் கர்ப்பமான நிலையில் இருப்பதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த சேனாரத்னவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

மக்களை தவறாக வழிநடத்துதல் மற்றும் பிச்சை எடுத்தல் ஆகிய குற்றச்சாட்டின் கீழ் அவர் குற்றம் செய்துள்ளதாகவும், சந்தேகநபரை பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான போலி கர்ப் பிணி பெண்கள் அதிகளவில் இருப்பதாகவும் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து பயணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!



இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளதாக இங்கிலாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் மிரர் செய்தித்தாள் இந்த செய்தியை பிரசுரித்துள்ளது.

பிரபலமான சுற்றுலா தலங்களை பயங்கரவாத குழுக்கள் குறிவைக்க வாய்ப்புள்ளதாக, வெளியுறவு அலுவலகம் 2024 நவம்பர் மாதம் 14ஆம் திகதி தமது பயண ஆலோசனையில் தெரிவித்துள்ளதாக இந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இலங்கை செல்லும் இங்கிலாந்து நாட்டவர்கள், நெரிசலான பொது இடங்களைத் தவிர்த்து, தங்கள் சுற்றுப்புறங்களில் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உலகளவில் இங்கிலாந்தின் நலன்களையும் அதன் மக்களையும் பாதிக்கும் பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகமாக உள்ளதாக தெரிவித்துள்ள இங்கிலாந்தின் வெளியுறவு அலுவலகம், உலக நாடுகளுக்கு செல்லும் தமது நாட்டவர்களையும் எச்சரித்துள்ளது.

இந்தநிலையில், வெளிநாடுகளில் இருக்கும்போது பயங்கரவாதத்தால் ஏற்படும் ஆபத்தை குறைப்பதற்கான உள்ளூர் ஊடக அறிக்கைகளைப் இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருக்குமாறும், உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றுமாறும் வெளியுறவுத்துறை வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான தொடர்ச்சியான மோதலின் விளைவாக அதிகரித்து வரும் உலகளாவிய பதற்றங்கள் காரணமாக வெளியுறவு அலுவலகம் சில இடங்க ளுக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்துள்ளது.

அமெரிக்காவின் சில இடங்களில் தீவிரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், பிரித்தானிய ஊடகம் இந்த பயண ஆலோசனை பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

*மாத்தறை சிறைச்சாலையில் மரமொன்று முறிந்து விழுந்ததில் காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றொரு கைதியும் உயிரிழந்ததாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.*

*குறித்த விபத்தில் 43 வயதான கைதி ஒருவரே உயிரிழந்தார்.*

*அதன்படி, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2ஆக உயர்ந்துள்ளது.*

*இந்த விபத்தில் 11 பேர் காயமடைந்த நிலையில் மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஆபத்தான நிலையிலிருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது*

## அரசாங்கத்தின் நடவடிக்கையால் வியப்படைந்த சர்வதேச நாணய நிதியம்!




சர்வதேச நாணய நிதியக் குழு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து வியப்படைந்ததாக கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

மேலும், வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மூன்று மாதங்களில் மீட்டுள்ளோம் என அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மூன்று மாதங்களில் நாட்டை மீட்டு எடுத்தமைக்காக மகிழ்ச்சியடைய வேண்டுமென தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகத்திற்கு வரும் எரிபொருள் கப்பலுக்கு பணம் செலுத்த முடியாதிருந்த நிலைமையை மாற்றியுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பத்து நாட்களில் பேச்சுவார்த்தைகளை முடிந்ததாகவும், டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன்னதாக பேச்சுவார்த்தைகளை முடிக்க வேண்டுமென திட்டமிட்டு இவ்வாறு பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

தமது குழுவின் அர்ப்பணிப்பு குறித்து சர்வதேச நாணய நிதியம் பாராட்டியதாக சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.



## மழையுடனான வானிலை குறைவடையும்

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை இன்று தல் தற்காலிகமாகக் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக்கூடும். மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கைதிகளை மிருகங்களை போல் நடத்த வேண்டாம்

*கைதிகளும் மனிதர்களே என்ற வாசகத்தை நினைவு கூர்ந்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, கைதிகளை மிருகங்களைப் போன்று நடத்த வேண்டாம் எனவும், சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.*

*நீண்ட இரும்புச் சங்கிலியுடன் கைவிலங்கிடப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்ற அறையில் வரிசையாக ஆஜர்படுத்தியமைக்காக சிறைச்சாலை அதிகாரிகளை குற்றம் சுமத்திய போதே, நீதவான் இந்த உத்தரவை வழங்கினார்.*

*சந்தேகநபர்களை மனிதர்களைப் போன்று நடத்த வேண்டும் என வலியுறுத்திய நீதவான், இனிமேல் அவ்வாறு செய்ய வேண்டாம் எனவும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.*

*நீதிமன்றம் விடுமுறை என்பதால், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் நீதிமன்றப் பெயரின் வழக்கு எண் 03 நீதிமன்றில் அழைக்கப்பட்டது.*

*விளக்கமறியலில் ஆஜர்படுத்தப்பட்ட சுமார் 40 சந்தேக நபர்கள் ஒரே சங்கிலியில் கைவிலங்குகளுடன் நீதிமன்ற அறைக்கு அழைத்து வரப்பட்டனர்.*

*நீதிமன்ற இலக்கம் 03 இன் சிறைச்சாலையில் சந்தேக நபர்களின் எண்ணிக்கையை அனுமதிக்க முடியாது என்பதால், சந்தேக நபர்களை ஒரே இடத்தில் கைவிலங்கிட்டு நீதிமன்ற அறையில் ஆஜர்படுத்த அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.*

*நீதிமன்ற அறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட கைதிகளை பார்த்த நீதவான், இந்த விவகாரத்தை சுட்டிக் காட்டியதுடன், கைதிகளை மனிதர்களாக நடத்துமாறு கடுமையாக எச்சரித்தார்.*

*இந்த சம்பவத்திற்கு சிறை அதிகாரிகள் நீதவானிடம் மன்னிப்பு கேட்டனர்.*

*நீதவான் பிறப்பித்த உத்தரவின் பின்னர், சிறைச்சாலை அதிகாரிகள் கைவிலங்குகளுடன் நீதிமன்ற அறையில் கைதிகளின் கட்டுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டதை காண முடிந்தது.*

## 750 இலட்சம் நிதி மோசடி:
## நாமலுக்கு எதிராக சிஐடி-யில் முறைப்பாடு

*கொழும்பு கோட்டையில கட்டப்பட்டு கைவிடப்பட்ட கிரிஷ் கட்டிடத்தில் 5 வீடுகளை கொள்வனவு செய்துள்ள வர்த்தகர் ஒருவர் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச(யேஅயட சுயதயியமளய) உள்ளிட்ட மூவருக்கு எதிராக முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.*

*இந்த முறைப்பாடானது நேற்றையதினம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*வீடுகளை கொள்வனவு செய்துள்ளமையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் கடந்த அரசாங்கத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த அப்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வித்யாலங்கவைரவுக்கு எதிராகவே குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ரவி வித்யாலங்கார தன்னிடம் இருந்து 750 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு அந்த தொகையை ஏமாற்றியதாக வர்த்தகர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.*

*இது தவிர, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, திலினி பியூமாலி உள்ளிட்டோரும் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் கூறியுள்ளார்.*

*இது தொடர்பில் தாம் இதற்கு முன்னர் 7 வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் 15 தடவைகள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

# வருகின்ற 6 ஆம் திகதி சென்னை தீவுத்திடலில் அரசு பொருட்காட்சி!



தமிழக சுற்றுலாத்துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சென்னை தீவுத் திடலில் அரசு தொழில் பொருட்காட்சி ஜனவரி முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் வரை நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு பொருட்காட்சி அரங்குகள் அமைக்கும் பணி டிசம்பர் மாதம் இறுதியில் தொடங்கியது.

சென்னையில் தொடர்ந்து பெய்து வந்த மழையால் நுழைவுவாயில், ஸ்டால்கள், அரங்குகள் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. மத்திய, மாநில அரசுகளின் 53 அரங்குகள் இடம் பெறுகின்றன.

பொழுதுபோக்கு விளையாட்டு சாதனங்கள், சிறுவர் ரயில் உள்ளிட்டவை வழக்கம்போல இந்த வருடமும் இடம்பெறுகின்றன. நூற்றுக்கும் மேலான கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் மகிழ்விக்கும் வகையில் பொருட்காட்சி தயாராகி வருகிறது.

பொருட்காட்சியை பார்வையிட நுழைவுக் கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லை என்ற நிலையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட கட்டணமே தற்போது வசூலிக்கப்பட உள்ளது. பெரியவர்களுக்கு ரூ.40, சிறுவர்களுக்கு ரூ.25 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொருட்காட்சி ஸ்டால்கள், அரங்குகள் அமைக்கும் பணி முடிந்தன.

இதையடுத்து பொருட்காட்சி வருகிற 6-ந் திகதி (திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு திறக்கப்படுகிறது. அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைக்கிறார்கள்.

## 'சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு' கருத்தரங்கை தொடங்கி வைக்கும் முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியக கலையரங்கத்தில் வருகின்ற 5-ந் திகதி 'சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு' நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

குறித்த கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

மேலும் சர். ஜான் மார்ஷல் சிலைக்கு அடிக்கல் நாட்டியும் 'சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்: ஒரு வடிவவியல் ஆய்வு" நூலினை வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றும் அதேவேளை வரவேற்பு, கருத்தரங்கு நோக்கவுரையை தமிழக அரசின் நிதித்துறை செயலாளரும் தொல்லியல் துறை ஆணையருமான உதயசந்திரன் ஐ.ஏ.எஸ், தலைமையுரை - தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ் ஆகியோர் உரையாற்ற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நெல்லை வரும் ஜமைக்காவில் சுட்டுக் கொல்லப்பட்ட வாலிபர்





ஜமைக்கா நாட்டில் தென்காசி மாவட்டம் சுரண்டையை சேர்ந்த சுபாஷ் அமிர்தராஜ் என்பவர் சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறார். இந்த சூப்பர் மார்க்கெட்டில் நெல்லை சந்திப்பு மீனாட்சி புரம் புளியந்தோப்பு நடுத்தெருவை சேர்ந்த நாகராஜன் என்பவரது மகன் விக்னேஷ் (வயது 31) என்பவர் ஓராண்டுக்கு மேலாக மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் அந்நாட்டில் கடந்த மாதம் 18-ந் திகதி அதிகாலையில் சூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து கொள்ளையர்கள் நடத்திய துப்பாக் கிச்சூட்டில் விக்னேஷ் மீது குண்டு பாய்ந்து அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். அவருடன் வேலை பார்த்த மேலும் 2 பேர் காயமடைந்தனர். இதையறிந்த அவர்களின் உறவினர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

விக்னேஷின் உறவினர்கள் அவரது உடலை விரைந்து இந்தியா அனுப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு சென்று தஞ்சை பகுதி தி.மு.க. செயலாளர் தஞ்சை சுப்பிரமணியன் தலைமையில் மனு அளித்தனர். எம்.பி ராபர்ட் புரூஸ் விக்னேஷின் உடல் விரைவில் தாயகம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த நிலையில் விக்னேஷ் உயிரிழந்து 15 நாட்களுக்கு மேல் ஆகியும் அவரது உடல் தாயகம் கொண்டு வரப்படவில்லை. இதனால் அவரது உறவினர்கள் கடும் சோகத்தில் உள்ளனர்.

இதுகுறித்த விக்னேஷின் உறவினர்கள் கூறுகையில், விக்னேஷின் உடலுக்கு நேற்று தான் பிரேத பரிசோதனை நிறைவு பெற்றதாக அந்நாட்டில் இருந்து எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து விக்னேஷின் உடல் விமானம் மூலம் தாயகம் கொண்டு வர ரூ.16 லட்சம் வரை செலவாகும் என தெரிவித்துள்ளார்கள். இது அதுதொடர்பாக பேசி வருகிறோம். அடுத்த வாரத்தில் விக்னேஷின் உடல் நெல்லைக்கு கொண்டு வரப்படும் என நம்புகிறோம் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படப்பையில் 9ஆம் திகதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் அறிவிப்பை வெளியிட்டார் எடப்பாடி பழனிசாமி



அ.தி.மு.க. காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பில் வருகிற 9-ந்திகதி (வியாழக்கி ழமை) காலை 10 மணியளவில், படப்பையில் உள்ள குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

வண்டலூர்-வாலாஜாபாத் சாலை படப்பையில் ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தியும், சமீபத்தில் பெஞ்சல் புயலால் ஏற்பட்ட கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு உரிய நிவாரணம் வழங் காதது கடுமையாக அதிகரித்துள்ள விலை வாசி உயர்வு, கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தாத தி.மு.க. அரசைக் கண்டித்தும் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இடங்களில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைக்காத, குடிநீர் வசதிகளை முழுமையாக ஏற்படுத்தாத குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் கழக மகளிர் அணிச் செயலாளரும், கழக செய்தித் தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான பா. வளர்மதி தலைமையிலும் காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சோமசுந்தரம், குன்றத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.வுமான மதனந்தபுரம் பழனி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

மேலும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கழக பிரதிநிதிகள், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் இதன்போது அவர் கூறியுள்ளார்.

# பல்லுயிர் காக்கும் உறுப்புத் தானம்!



ஒரு வருடத்தில் மாற்று உறுப்பு கிடைக்காமல் இறப்பவர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் நீண்டு கொண்டே இருக்கிறது. வருடத்துக்குக் கல்லீரல் கிடைக்காமல் இறப்பவர்கள், இதயம் கிடைக்காமல் இறப்பவர்கள், சிறுநீரகம் கிடைக்காமல் இறப்பவர்கள், இது தவிர உறுப்புகள் முழுச்செயல்பாட்டில் இல்லாமல் போராடுபவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

உறுப்புத் தானத்தின் அவசியத்தை உணர்ந்து 1994ஆம் ஆண்டிலேயே இதற்கெனத் தனிச் சட்டம் இயற்றி, உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டது இந்திய அரசு. என்றாலும், உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நம் மக்களுக்கு எட்டவில்லை. 2008, செப்டம்பர் 23 இல் சென்னையில் அசோகன் மற்றும் புஸ்பாஞ்சலி எனும் மருத்துவத் தம்பதியரின் மகன் ஹிதேந்திரன் ஒரு விபத்தில் அடிபட்டு மூளைச்சாவு அடைந்தபோது, அவரது உடல் உறுப்புகளைத் தானமாகக் கொடுத்த பிறகுதான் தமிழ்நாட்டில் ஓரளவுக்காவது உறுப்புத் தானத்தின் மகிமை உணரப்பட்டது. இதை நினைவுகூரும் வகையில் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23 ஐ மாநில உடல் உறுப்பு தானத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அநேகம் பேர் உடல் தானத்தையும் உறுப்பு தானத்தையும் குழப்பிக்கொள்கின்றனர். கண் மற்றும் சிறுநீரகத்தைத் தானமாகத் தரலாம் என்பது மட்டுமே பலருக்கும் தெரிந்திருக்கிறது் உடலின் பல உறுப்புகளைத் தரமுடியும் என்பது தெரியவில்லை. உறுப்பு தானத்தை யார், எங்கு, எப்படிச் செய்வது என்பது பாதிப்பேருக்குத் தெரியவில்லை.



**எது உறுப்புத் தானம்?**

ஒருவர் இயற்கையாக இறந்த பிறகு, அவரது முழு உடலையும் மருத்துவ மாணவர்களின் கல்விக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் கொடுப்பது உடல் தானம். இவர்களின் கண்களை மட்டும் 6 மணி நேரத்துக்குள் எடுத்து, மற்றவர்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். மாறாக, மூளைச்சாவு ஏற்பட்டவரின் உடலில் இருந்து உறுப்புகளை எடுத்து, மற்றவர்களுக்குப் பயன்படுத்துவது உறுப்பு தானம்.

இதயம், கண், சிறுநீரகம், நுரையீரல், கல்லீரல், கணையம், குடல், தோல், எலும்பு, இதய வால்வு, இரத்தக்குழாய் என ஒருவரே பல உறுப்புகளைத் தானமாகத் தரலாம். ஒருவர் செய்யும் உறுப்பு தானத்தால், ஒரே நேரத்தில் 14 பேர் பலன் அடைகின்றனர். உயிரோடு இருக்கும்போது சிறுநீரகம், எலும்பு மற்றும் கல்லீரலின் ஒரு பகுதியைத் தானமாகத் தரலாம். இதன் முழு விவரங்களுக்கு கூகுளில் (www.organdonor.gov)ஐ சொடுக்குங்கள்.

உறுப்புத் தானத்தில் முறைகேடுகளைத் தடுக்கவும், இடைத் தரகர்களுக்கு இடம்தராமல் இருக்கவும் பல நாடுகள் உறுப்புத் தானத் திட்டங்களை தொடங்கியுள்ளது . இத்திட்டத்தின் கீழ் பல மருத்துவமனைகள் இணைந்துள்ளன. இந்த மருத்துவமனைகளில் யாருக்கேனும் மூளைச்சாவு ஏற்பட்டால், உடனே உறுப்புத் தான ஒருங்கிணைப்புக் குழுவுக்குத் தெரிவிப்பார்கள். இக்குழுவில் உள்ளவர்கள் அந்த மருத்துவமனைக்குச் சென்று, மூளைச்சாவு ஏற்பட்டவரின் உறவினரிடம் பேசி அவர்களின் சம்மதம் கிடைத்ததும் அதற்கான உறுதிமொழிக் கடிதத்துடன் உறுப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

உடல் உறுப்புகள் தேவைப்படும் நோயாளிகள் மருத்துவமனை மூலமாக ஏற்கெனவே இந்தத் திட்டத்தினரிடம் கட்டணம் செலுத்திப் பதிவுசெய்திருப்பார்கள். பதிவுசெய்து காத்திருப்பவர்களுக்கு முன்பதிவு அடிப்படையில் உடல் உறுப்புகள் வழங்கப்படும். பொதுவாக, இதயத்தை 2 மணி நேரத்திலிருந்து 4 மணி நேரத்துக்குள்ளும், கல்லீரலை 8 மணி நேரத்துக்குள்ளும் பொருத்திவிட வேண்டும். சிறுநீரகத்தைச் சரியான முறையில் பதப்படுத்திக்கொண்டால் 12 மணி நேரத்துக்குத் தாங்கும். உறுப்புகளை எடுப்பதைவிட முக்கியமானது, எடுத்த உறுப்பைச் சரியான நேரத்துக்குள் அடுத்தவருக்குப் பொருத்துவது.

உறுப்புத் தானம் செய்ய வயது தடையில்லை. எய்ட்ஸ் மற்றும் ஹெபடைடிஸ் நோயாளிகள் உறுப்புத் தானம் செய்யமுடியாது.

உறுப்புத் தானம் செய்ய விரும்புவோர் அதற்கான அட்டையை பெற்று கொள்ள வேண்டும்.இந்த அட்டையில் பெயர், இரத்த வகை, எந்த உறுப்பைத் தானம் செய்ய விருப்பம் போன்ற விவரங்கள் இருக்கும். இதை எப்போதும் கைவசம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் உறுப்பு தானம் செய்ய விரும்புவதை அவர் வீட்டிலும் சொல்லிவிட வேண்டும். அப்போதுதான் உறுப்பு தான ஒருங்கிணைப்புக் குழுவினர் உறுப்பு கேட்டு வரும்போது உறவினரின் சம்மதம் கிடைப்பதில் சிரமம் இருக்காது. உறுப்பைப் பெறுவதில் ஏற்படும் தாமதத்தையும் தவிர்க்கலாம்.

**தடைகள் என்னென்ன?**

உலக அளவில் உறுப்புத் தானத்தில் முதலிடம் வகிக்கும் ஸ்பெய்னில் ஒரு லட்சம் பேரில் 400 பேரும், இந்தியாவில் ஒரு லட்சம் பேரில் 8 பேர் மட்டுமே உறுப்பு தானம் செய்யத் தயாராக இருக்கின்றனர். தமிழ்நாட்டில் 13 பேர்.

ஆண்டாண்டு காலமாக நம் வாழ்வியல் கலாசாரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சில மூடநம்பிக்கைகள்தான் முக்கியத் தடைகள். உறுப்புத் தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துவிட்டால், மருத்துவமனைகளில் வேண்டும் என்றே சரியான சிகிச்சை கொடுக்காமல் இறப்புக்கு வழிசெய்துவிடுவார்களோ என்ற பயமும் பலரைத் தடுக்கிறது. இந்த இரண்டையும் நாம் கடந்து வர வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**என்ன செய்ய வேண்டும்?**

தனியார் மருத்துவமனைகளோடு ஒப்பிடும்போது 5 வீதம் கூட அரசு மருத்துவமனைகளில் நடப்பதில்லை. உறுப்புத் தான மாற்றுச் சிகிச்சையில் தனியார் மருத்துவமனைகள்தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தச் சிகிச்சைக்குப் பெறப்படும் உறுப்புகளுக்கு இவர்கள் பணம் பெறுவதில்லை. ஆனால், அதற்கான சிகிச்சைக் கட்டணங்கள் சில லட்சங்களுக்குக் குறையாது. இதனால், வசதி படைத்தவர்கள் மட்டுமே பயனடைகின்றனர்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் ஏழை நோயாளிகளுக்கு உறுப்புகள் கிடைப்பதில்லை. இந்தக் குறைகளைச் சரிசெய்யும் விதமாக இந்த மையங்களை அமைப்பதற்கு அரசு ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அனைத்திலும் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குத் தேவைபடும் எல்லா வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டியது அரசின் கடமை. அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் உறுப்புகளைத் தானமாகப் பெற்று, அவற்றை முறைப்படி பாதுகாத்து வைப்பதற்கு உண்டான வசதிகளையும் அரசு செய்துதர வேண்டும்.

உறுப்பு தானம் தொடர்பான கருத்துகளைப் பள்ளி, கல்லூரிகளில் தொடங்கி சமூகத்தின் எல்லா மூலைகளுக்கும் அரசு எடுத்துச்செல்ல வேண்டும். சமூக வலைதளங்களை இதற்கு முக்கியமான கருவியாகப் பயன்படுத்தலாம். மேலை நாடுகளில் 18 வயது நிரம்பியதும் ஓட்டுனர் உரிமம் தரும்போது, அதில் உறுப்பு தானம் செய்ய விருப்பமா எனக் கேட்டு, குறித்துக் கொடுத்துவிடுகின்றனர். இதை நாமும் பின்பற்றலாம்.

உறுப்பு தானம் செய்பவர்களை உற்சாகப்படுத்த சமூகத்துக்கு அவர்களுடைய மகத்தான பங்களிப்பை அங்கீகரிக்கும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும். இஸ்ரேல் நாட்டில் உறுப்பு தானம் செய்பவரின் குடும்பத்தினருக்கு ஊதியத்தில் ஊக்கத் தொகை அளிக்கின்றனர். இன்னும் சில மேலை நாடுகளில் அவர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவச் சிகிச்சைகள் இலவசம். இப்படி அவரின் குடும்பத்துக்கு அளிக்கப்படும் முன்னுரிமையும் சலுகையும் அவர்களைத் தனித்துக் காட்டும். இது மேலும் பலரை ஈர்க்கும். பல உயிர்களைக் காக்கும்.

(ஓகஸ்ட் 13 தேசிய உறுப்புத் தான தினம்)

# தென் கொரியா அதிபரைக் கைது செய்ய முயற்சி ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு





கிழக்கு ஆசிய நாடான தென்கொரியாவில் அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் மசோதா தொடர்பாக ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதையடுத்து அந்நாட்டு அதிபர் யூன்-சுக் இயோல் கடந்த சில நாட்களுக்கு முன்பு அவசர நிலை இராணுவ சட்டத்தை அமுல்படுத்தினார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் சில மணி நேரங்களில் அந்த அறிவிப்பை அதிபர் திரும்ப பெற்றார்.

இந்த விவகாரத்தில் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக புலனாய்வு அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். விசாரணைக்காக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர் முன்னிலையாகவில்லை.

இதையடுத்து அவரை கைது செய்யுமாறு சியோல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதனால் அவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற சூழ்நிலை நிலவியது.

இந்த நடவடிக்கையை எதிர்த்து அவரது ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தென கொரிய தலைநகர் சியோலில் அவர்கள் சாலையில் படுத்து உருண்டு நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்

சியோலில் உள்ள அவரது இல்லம் முன்பும் ஏராளமானவர்கள் திரண்டனர். நேற்று இரவே மத போதகர்கள் உள்ளிட்ட பலர் குவிந்தனர். அவர்கள் விடிய விடிய பிரார்த்தனை நடத்தினார்கள். அதிபரை கைது செய்ய விடமாட்டோம் என கோசமிட்டனர்.


அவர்கள் எதிர்க்கட்சி தலைவரை கைது செய்யவேண்டும் என்றும் வடகொரியாவை போல நமது நாட்டை சோசலிச நாடாக மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிபரின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இதனால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டதால் 3 ஆயிரம் பொலிஸார் அதிபர் வீடு முன்பு குவிக்கப்பட்டு தடுப்புகள் அமைத்து ஆதரவாளர்கள் மேலும் முன்னேற விடாமல் தடுத்தனர்.

இந்த நிலையில் யூன்-சுக் இயோலை கைது செய்யும் முயற்சியில் புலனாய்வு அதிகாரிகள் குழுவினர் இறங்கினார்கள். இன்று காலை அவர்கள் மத்திய சியோலில் உள்ள அவரது இல்லத்துக்குள் நுழைந்தனர்.

அவர்களை அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த இராணுவ அதிகாரிகள் தடுத்து நிறுத்தினார்கள். இதனால் கைது செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## சீனாவில் வேகமாக பரவும் புதிய வைரஸ் நிரம்பி வழிகின்றன மருத்துவமனைகள்







உலகையே உலுக்கிய கோவிட்-19 தொற்று சீனாவில் பரவி 5 வருடங்களை கடந்த நிலையில் தற்போது மனித மெட்டாப்நியூமோ எனும் புதிய வைரஸ் (HMPV) தொற்று அங்கு பரவி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதிக அளவில் பரவத் தொடங்கியுள்ள இந்த வைரஸால் மருத்துவமனைகளும், மயானங்களும் நிரம்பி வழிவதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக குழந்தைகள் மருத்துவமனையில் நிமோனியா மற்றும் நுரையீரல் வெண்மை ஜறாவைந டரபெஸ பாதிப்பு கொண்ட குழந்தைகள் அதிகம் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இந்த மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV)இன்புளுயென்சா யு, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கொரோனா தொற்று உள்ளிட்ட பல வைரஸ்கள் ஒரே நேரத்தில் பரவி வருவதாக அறிக்கைகள் மற்றும் சமூக ஊடக பதிவுகள் தெரிவிக்கின்றன.

சுவாச நோய்கள் அதிகரித்து வரும் போதிலும், இது தொடர்பாக சீன அரசாங்கமோ அல்லது உலக சுகாதார அமைப்போ (WHO) அதிகாரபூர்வமாக இன்னும் எந்த எச்சரிக்கையும் வெளியிடவில்லை. இருப்பினும் சீன அரசு கண்காணிப்பு குழுவை அமைத்து பாதிப்புகளை கண்காணித்து வருகிறது.

இந்த தொற்றால் குழந்தைகள்மற்றும்வயதானவர்கள் அதிகமாக பாதிப்படையக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட ஆஸ்துமா அல்லது சிஓபிடி போன்ற பிரச்சினைகளை கொண்டவர்கள் கடுமையான அபாயங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நோயின் அறிகுறிகளாக காய்ச்சல், இருமல் மற்றும் சளி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டு சில நோயாளிகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. இவை மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியாவுக்கு வழிவகுக்கலாம்.

குளிர்காலம் மற்றும் வசந்த காலத்தில் இந்த சுவாச நோய்த்தொற்று தொடர்ந்து அதிகரிக்கும் என்று அதிகாரிகள் கணித்துள்ளனர்.

சீனாவில், HMPV, 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இடையேயும், குறிப்பாக வடக்கு மாகாணங்களில் அதிக பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது.

## கட்டடத்தில் மோதிய விமானம் 2 பேர் சாவு : பலர் படுகாயம்



அமெரிக்கா நாட்டின் கலிபோர்னியாவில் சிறிய ரக விமானம் ஒன்று வர்த்தக கட்டிடத்தில் மோதிய விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும், 18 பேர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் காயமுற்ற பத்து பேர் உடனடியாக மீட்கப்பட்டு காயங்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், எட்டு பேர் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டதாக ஃபுல்லர்டன் பொலிஸ் அதிகாரிகள் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியது ஒற்றை எஞ்சின் கொண்ட சுஏ-10 ரக விமானம் என்று ஃபெடரல் ஏவியேஷன் சார்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. விபத்து ஏற்பட என்ன காரணம் என்பது குறித்து எந்த தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## சிலி நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.1 ஆகப் பதிவானது!

தென் அமெரிக்காவின் மேற்கில் அமைந்துள்ள சிலி நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.1 ஆக பதிவாகி இருக்கிறது. நிலநடுக்கம் ஏற்பட்டதை ஐரோப்பிய நிலநடுக்கவியல் துறை உறுதிப்படுத்தி இருக்கிறது.

நிலநடுக்கமானது பூமியில் இருந்து 104 கிலோமீட்டர்கள் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக பொருள் சேதமோ அல்லது உயிரிழப்புகள் குறித்தோ இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. பொதுச்செயலாளராகச் செயற்பட்ட பாலித ரங்கே பண்டார, அந்தப் பதவியில் இருந்து விலகியிருந்த நிலையில் புதிய பொதுச்செயலாளராக தலதா அத்துகோரள நியமிக்கப் பட்டுள்ளார்.

## மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை.

எனவே, விரைவில் தேர்தலை நடத்தி உள்ளூராட்சி சபைகளுக்குத் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குரிய வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அந்தவகையில் எதிர்வரும் மார்ச் இறுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, ஏப்ரல் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைகளை நிறுவுவதற்கும் உத்தேசித்துள்ளோம்." - என்றார்.

## மூளைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர் விஜயகுமார். இவரது 19 வயதான மகன் பிரேம்குமார், கடந்த முதலாம் திகதி விபத்துக்குள்ளானார்.

இதில் அவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக மூலக்குளம் தனியார் வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் மூளைச்சாவு அடைந்தார்.

அதனால் அவரது உடல் உறுப்புகளான சிறுநீரகம், கல்லீரல், இதயம், நுரையீரல் மற்றும் இரு கண்களைத் தானம் கொடுக்க அவரது பெற்றோர் முன்வந்தனர்.

அதனைத் தொடர்ந்து, 5 உறுப் அறுவை சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டன. இதன்மூலம் எழுவர் உயிர் பிழைத்துள்ளனர்.

இறந்த இளைஞர் பிரேம்குமாரால், 7 பேருக்கு உடல் உறுப்புத் தானம் கிடைக்கப் பெற்றமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகுமாறு யோஷித ராஜபக்ஷவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி இன்று முற்பகல் 10 மணியளவில் அவர் குறித்த திணைக்களத்தில் முன்னிலையானார்.

இதனையடுத்து, அவர் இன்று நண்பகல் 12 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வரும் காலத்தில் அரசால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்த பட்சம் அந்த விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி., அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கஜேந்திரகுமாரிடம் வினவியபோது, எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் மீண்டும் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதனூடாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்தத் தீர்வுத் திட்ட வரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்துரையாடவும் முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# அதிபரை இடம் மாற்றக்கோரி போரட்டம்





முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி அதிபரினை இடமாற்றம் செய்யக்கோரி பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று காலை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அதிபர் கல்லூரியின் வளர்ச்சியை சீர்குலைப்பதாகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர்கள் இணைந்து இன்றையதினம் காலை 7.30 மணியளவில் பாடசாலை நுழைவாயிலில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆர்ப்பாட்டகாரகள் கூறுகையில்,

குறித்த போராட்டமானது 14 ஆசிரியர்களுக்கு அண்மையில் அவர்களுக்கான பதிலீடு இன்றி, தனிப்பட்ட பழிவாங்கல் நோக்கில், இடமாற்றத்திற்கு சிபாரிசு செய்தமை, இவரது பொறுப்பற்ற வார்த்தை பிரயோகங்கள், தனிப்பட்ட பழிவாங்கல்கள் காரணமாக இவர் பாடசாலையை பொறுப்பேற்கும் போது இருந்த ஆசிரியர்கள் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி (83 ஆசிரியர்களிலிருந்து 63 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது) ஏற்பட்டுள்ளது.

இவரால் பாடசாலையின் ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு பாடசாலையின் அகச்சூழல் சீரின்றியும், பாதுகாப்பின்றியும் உள்ளது. பாடசாலை சொத்துகளை பாதுகாப்பது மற்றும் அது தொடர்பான வெளிப்படை தன்மை இல்லாது உள்ளது.

(தொழில்நுட்ப ஆய்வுகூட பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் கல்வித்திணைக்கள விசாரணைகள் நடைபெறுகின்றன) அதிபர் மீதான நிதி மோசடி விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

குறித்த விடயங்கள் தொடர்பாக அதிபருடன் பல தடவைகள் SDS/ OBA இணைந்து நடத்திய கலந்துரையாடல்களில் மேற்கொண்ட தீர்மானங்கள், ஆலோசனைகள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் தான்தோன்றிதனமான அதிபரின் செயற்பாடுகளால் மாணவர் கல்வி பாதிக்கப்படுகிறது.

குறிப்பாக உயர்தர மாணவர்களுக்கு சில பாடங்களுக்கு பொருத்தமான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லை. பல பாட வேளைகளில் வகுப்புகள் நடைபெறுவதில்லை. இவ்வாறான காரணங்களாளே குறித்த போராட்டம் இன்றையதினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த அதிபர் தொடர்பான விடயங்கள் இரு செயலாளர்களாலும் வலயகல்விபணிப்பாளர், செயலாளர் கல்வி அமைச்சு, பிரதிக் கல்விப்பணிப்பாளர் - தேசிய பாடசாலை, கல்வி அமைச்சு என்பவற்றிற்கு நேரிலும், தொலைபேசியிலும், கடிதம் மூலமும் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையிலே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் போராட்ட இடத்திற்கு சென்ற அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் குறித்த போராட்டத்திற்கான காரணங்களை கேட்டறிந்திருந்தார். அதன்பின்னர் போராட்டத்திற்கான காரணம் தொடர்பான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இது ஒரு தேசிய பாடசாலை ஆகையினால் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் தான் இருக்கின்றது. எனவே மத்திய அரசின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இந்த மகஜரை அனுப்புவதாகவும், அதன் பிரதியை சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு வழங்கி இதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்திருந்தார்.

மேலும் போராட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அரச தரப்பு எம்.பியை அவமதித்த மொட்டுக் கட்சி உறுப்பினர் கைது



தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை சமூக ஊடகங்களில் அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், களுத்துறை - மில்லனிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ரவீந்திர ரம்முனி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை அகுருவாதோட்ட - படகொடவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான ரவீந்திர ரம்முனி, அண்மையில் தனது பேஸ்புக் கணக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை இழிவுபடுத்தும் வகையில் பதிவொன்றை இட்டிருந்தார்.

பின்னர் அந்தப் பதிவை அன்றே நீக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாத்தறை சிறையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொரு கைதியும் உயிரிழப்பு

*மாத்தறை சிறைச்சாலையில் அரச மரத்தின் கிளையொன்று முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு கைதியும் உயிரிழந்தார்.*

*தெவிநுவர பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய நபரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.*

*விவாகரத்து வழக்கில் ஜீவனாம்சம் செலுத்தத் தவறியமைக்காக அவருக்குத் தலா 5 மாதங்கள் வீதம் 10 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு எதிராக மேலும் 6 வழக்குகள் தீர்க்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.*

*இந்நிலையில், அரச மரத்தின் கிளை முறிந்து வீழ்ந்ததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 12 கைதிகள் காயமடைந்து மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சம்பவ தினத்தன்று ஒருவர் மரணித்தார்.*

*தற்போது காயமடைந்தவர்களில் 7 பேர் மீண்டும் சிறைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதுடன், மேலும் மூன்று பேர் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.*







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2025 இல் வெளியிடப்பெற்றது.